திராவிட மாடல் ஆட்சியில் தாய் உள்ளத்துடன் தொடங்கி வைக்கப்பட்ட

# ‘தாயுமானவர்’ திட்டத்தை புறக்கணிக்க முடிவு!

## நியாவிலைக்கடை பணியாளர் சங்கம் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 21–

தமிழ்நாடு நியாவிலைக்கடை பணியாளர் சங்க மாநில தலைவர் ராஜேந்திரன், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கூட்டுறவு உணவு வழங்கல் பிரிவிற்கு அனுப்பி உள்ள மனுவில், வயதானவர்களுக்கு வீடு தேடி உணவு பொருட்கள் வழங்கும் தாயுமானவர் திட்டத்தை மாதத்தின் 2வது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைமுறைப்படுத்த வேண்டும். பயனாளிகளுக்கு பொருள்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழங்க வேண்டும். இத்திட்டம் செயல்படும் நாட்களில் மட்டும் ப்ளூ டூத் முறை, கைரேகை பதிவு தவிர்க்க வேண்டும். பிராக்சி முறையில் பொருள்கள் வழங்கலாம். வாகன வாடகை, ஏற்று கூலி, இறக்கு கூலி உயர்த்த வேண்டும். மாநில அளவில் கேஒய்சி என்பதான ரேகை பதிவு 99 சதவீதம் முடிவடைந்தது. அதிகாரிகள் அதனை 100 சதவீதம் முடித்து தர கடை பணியாளர்களை மன உளைச்சல் செய்கிறார்கள். அரசின் விடுமுறை நாட்கள் மற்றும் அதிக பட்ச வேலை நேரம் என பணியாளர்களுக்கு மேலிட உத்தரவு என டார்ச்சர் செய்வதை அதிகாரிகள் உடனடியாக கைவிட வேண்டும். வாணிப கிடங்கில் இருந்து சரியான எடையில் கடைகளுக்கு பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிக பிரச்சினை இருப்பதால் வரும் ஜூலை மாதம் முதல் தாயுமானவர் திட்டத்தை புறக்கணிக்க முடிவு செய்திருக்கிறோம்,” என தெரிவித்துள்ளார்.

---

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் முகாமில்

# பொதுமக்களிடம் வாங்கிய 3,000 புகார் மனுக்கள் நிலுவை!

## மீண்டும் புகார் தர வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கோவை, ஜூன் 21-

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை மக்கள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெறுகிறது. ஒவ்வொரு குறை தீர்ப்பு கூட்டத்திலும் 350 முதல் 450 புகார் மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 15 முதல் 30 நாளில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் எந்த தீர்வும் கிடைக்காமல் மீண்டும் புகார் தர வருவோர் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.

மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரை செய்து தீர்வு காண வலியுறுத்தி அனுப்பி வைத்த மனுக்கள் மீண்டும் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வருகிறது. இதை பார்த்து அதிகாரிகள் கடுப்பாகி போனாலும் இது வாடிக்கை தான் என விட்டு விடுகின்றனர். விரக்தியின் உச்சத்தில் மனுதாரர்கள் தற்கொலை முயற்சிக்கு செல்லும் விபரீதமும் மாவட்ட ஆட்சியர் ]அலுவலக வளாகத்தில் அவ்வப்போது நடக்கிறது.

காவல்துறையினர் தற்கொலை செய்பவர்களை தடுக்க தீவிர சோதனை செய்கிறார்கள். வாட்டர் பாட்டிலை திறந்து அதில் உள்ள தண்ணீரை குடிக்க வைத்து ‘பெட்ரோல்’ இல்லை என உறுதி செய்து அனுப்பி வைக்கும் அவலம் இருக்கிறது. அதையும் மீறி யாராவது தற்கொலைக்கு முயன்றால் “இங்கே எதுவும் செய்யக்கூடாது” என எச்சரித்து அனுப்புவது நடக்கிறது. தீர்வு கிடைக்காத அவலத்தின் உச்சமே தற்கொலை முயற்சி என்பதை அனைத்துதுறை அதிகாரிகளும் உணர்ந்துள்ளனர். ஆனாலும் கீழ்மட்ட அலுவலர்களை வேலை வாங்கி தீர்வு காண்பதில்லை. தங்களது டேபிளுக்கு பிரச்சினைக்குரிய விண்ணப்பங்கள் வராமல் பார்ப்பதிலும் உயர் அதிகாரிகள் கவனமாக இருக்கிறார்கள், இதனால் மனுவுக்கு நீதி கிடைக்காமல் இருப்பதால் புகார்தாரர்கள் புலம்புகின்றனர்.

வட்ட அளவில் பிரச்னைகளை தீர்க்க வேண்டிய அதிகாரிகள் குறிப்பாக கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், தாசில்தார்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சமூக பாதுகாப்பு திட்டத்தினர், மின் வாரியம், பஞ்சாயத்து நிர்வாகம் போன்ற பல்வேறு துறையினர் அலட்சியப் படுத்துவதால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார்தாரர்கள் வந்து குவிவதாக கூறப்படுகிறது. அந்த மனுக்கள் திரும்பவும் அந்தந்த அதிகாரிகளுக்கு சென்ற போதும் தீர்வு கிடைக்காத நிலையில் விரக்தியால் புகார்தாரர்கள் பலர் விட்டு விடுகின்றனர். அரசாங்கத்தின் உதவி கிடைக்காத உண்மையான பயனாளிகள் ஏமாற்றப்பட்டு விரக்தியில் கதறும் பரிதாப நிலைமை தொடர்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குறை தீர்ப்பு முகாமில் பொதுமக்களை வழிநடத்த யாருமில்லை, வளாகத்திற்கு வெளியே விண்ணப்பங்கள் விற்பவர்கள் பணம் தந்தால் புகார் மனுக்களை எழுதிதருகிறார்கள். விண்ணப்பங்க ளும் விற்பனை செய்யப்படுகிறது. புகார் மனுக்களை குறை தீர்க்கும் பிரிவில் பதிவு செய்து அதிகாரிகளிடம் அனுப்புகிறார்கள். ஆனால் உரிய அதிகாரிகள் முகாமிற்கு வருவதில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் சில அதிகாரிகளும், தாலூகா அலுவலக அதிகாரிகள் சிலர் மட்டுமே முகாமிற்கு வருகிறார்கள். உயரதிகாரிகள் பெரும்பாலும் முகாமிற்கு வருவதில்லை. பெயரளவிற்கு நடத்தப்படும் இந்த முகாமில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட புகார்கள் தீர்வு கிடைக்காத நிலையில் இருக்கிறது.

இதுவரை சுமார் 3 ஆயிரம் கோரிக்கை மனுக்கள் கிடப்பில் இருக்கிறது. இலவச மனை பட்டா, இலவச வீடு, முதியோர் உதவித் தொகை, மகளிர் உரிமை தொகை, மாற்று திறனாளிகள் உதவி திட்டங்கள் தொடர்பான பெரும்பாலான மனுக்கள் முடங்கி போய்விட்டது. காவல் துறை சம்பந்தப்பட்ட உதவிக்கான மனுக்களை மாவட்ட நிர்வாகத்தி னர் கண்டு கொள்வதில்லை. மாநகர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வருவது மில்லை. சட்டம் ஒழுங்கு, இடம், பண விவகாரம் தொடர்பான பிரச்னையால் தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள். இதை தவிர்க்க தேவையான முயற்சியை எடுக்கவில்லை. குறைதீர்ப்பு முகாம் மனுக்களும் தீர்வு கிடைக்க உயரதிகாரிகள் தீவிரம் காட்ட வேண்டும் என ஏழை, எளிய மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

சமூக பாதுகாப்பு திட்டத்தினர் கூறுகையில், சிஎம் செல்லுக்கு புகார் மனுக்கள் போகிறது. எந்த துறையில் எவ்வளவு விண்ணப்பங்கள் என வெளியே சொல்ல கூடாது என உத்தரவு போட்டு விட்டார்கள். தீர்வு காணும் விண்ண ப்பங்கள் எங்களுக்கு வராது. நாங்கள் வரும் விண்ணப்பங்களை அந்தந்த துறைக்கு பிரித்து அனுப்புவோம். ஏன் தீர்வு காணவில்லை என அந்தந்த துறை அலுவலர்கள் தான் சொல்ல வேண்டும். 80க்கும் மேற்பட்ட அரசு துறைகள் இருக்கிறது. இரண்டாவது முறையாக தரும் பெட்டிசன்கள் புதிதாக தான் பதிவாகும் என்றனர்.

---

# நீட் தேர்வு - சேலத்தில் மாணவி தற்கொலை!

சேலம், ஜூன் 21–

சேலம் மாவட்டம் கொங்கனாபுரம் வெள்ளாள புரத்தைச் சேர்ந்த சேகர் (வயது47) இவரது மகள் கோபிகா (வயது 19) இவர் பிளஸ் டூ முடித்து 2 முறை நீட் தேர்வு எழுதியும் தேர்வில் வெற்றி பெறவில்லை 3வது முறையாக நீட் தேர்வு எழுத இரவு, பகலாக படித்துக் கொண்டு இருந்தார்.

நடப்பாண்டில் 3வது முறையாக நீட் தேர்வு எழுதினார். ராஜஸ்தானில் நீட் தேர்வு வினாத் தாள் கசிந்ததை யொட்டி நீட் தேர்வு ரத்து செய்து விட்டதாக அறிவிக்கப்பட்டது

இதனால் தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெற்று தேர்ச்சி அடைவோம் என்று எதிர்பார்த்து வந்த நிலையில் தேர்வு ரத்து செய்யப்பட்டதாலும் இன்று 21 ம் தேதி நீட் தேர்வு நடைபெற இருந்த நிலையில் மன உளச்சலில் இருந்த கோபிகா வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். நீட் தேர்வு குளறுபடியால் மாணவி கோபிகா தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சேலம் மாவட்டத்தை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜூன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற ‘கறுப்புச் சட்டை மாநாட்டில்’ பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# கல்வியை காவிமயமாக்கும் முயற்சிகளை முறியடித்து, மாநில உரிமைகளை நிலைநாட்ட களமிறங்கும் மாணவர் அணி!

இந்தியாவின் உயர்கல்வி கட்டமைப்பு மீது இன்று ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுத்து வரும் அழுத்தம், மாணவர்களுக்கு பெரும் சுமையாகவும், கல்விக் கட்டமைப்பை சிதைக்கும் அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது. உயர்கல்வி கட்டமைப்பை சீரமைப்பதாக ஒன்றிய அரசு முன்வைத்துள்ள “விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான்” (VBSA) மசோதா, வெறும் கல்வி நிர்வாக மாற்றமாக மட்டும் பார்க்க முடியாத ஒன்றாக உள்ளதை கல்வியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

**நயவஞ்சக திட்டம்!**

பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகம் (AICTE), தேசிய ஆசிரியர் கல்விக் கழகம் (NCTE) உள்ளிட்ட அமைப்புகளை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, உயர்கல்வியை ஒழுங்குபடுத்தும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதாக ஒன்றிய அரசு கூறினாலும், அதன் பின்னணியில் கல்வித் துறையின் அதிகாரங்களை ஒன்றிய அரசின் தனது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லும் நயவஞ்சகமான திட்டம் ஒளிந்துள்ளது. கல்வியை பொதுப்பட்டியலில் இருந்து பறித்து, ஒன்றியத்தின் அதிகாரத்துக்குள் கொண்டு செல்லும் திட்டம் என்பதை சொல்லவும் தேவையில்லை. அதுதான் அவர்களின் இலக்கு.

தமிழ்நாட்டில் மாநிலங்களில் கல்வி உரிமை விவாதம் சாதாரண கல்விக் கொள்கை விவாதமாக மட்டும் அல்ல; மொழி, கல்வி, சமூகநீதி, மாநில உரிமை ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்த அரசியல் வரலாற்றின் தொடர்ச்சியாகவே பார்க்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே கல்வி என்பது சமூக மாற்றத்தின் கருவி என்ற புரிதல் தமிழ்நாட்டில் வலுவாக இருந்தது. நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் என தொடரும் சமூகநீதி அரசியல், கல்வியை வெறும் அறிவு பெறும் துறையாக அல்லாமல் சமூக முன்னேற்றத்தின் வாயிலாகவே பார்க்கிறது.

**மாநிலங்களின் தேவை பாதிக்கப்படும்!**

அந்த அடிப்படையில்தான் தமிழ்நாடு இடஒதுக்கீடு, முதல் தலைமுறை பட்டதாரி திட்டங்கள், பெண் கல்வி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் போன்ற பல முன்னோடி முயற்சிகளை செயல்படுத்தியது. இவை அனைத்தும் மாநிலத்தின் சமூக அமைப்பையும் தேவைகளையும் புரிந்துகொண்டு உருவாக்கப்பட்டவை. இன்று உயர்கல்வி தொடர்பான முக்கிய முடிவுகள் டெல்லியில் அமர்ந்திருக்கும் ஒரு மைய அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுவிட்டால், மாநிலங்களின் தனித்துவமான தேவைகள் எவ்வாறு பிரதிபலிக்கப்படும் என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாகிறது.

தேசிய கல்விக் கொள்கை 2020 அறிமுகமான நாளிலிருந்தே தமிழ்நாடு பல எதிர்ப்புகளை முன்வைத்து வந்தது. குறிப்பாக, கழகத்தின் எதிர்ப்புதான் இவ்வளவு காலமும் ஒன்றிய அரசுக்கு நெருக்கடிகளை அளித்து வந்தது. மும்மொழிக் கொள்கை, நுழைவுத் தேர்வு மையப்படுத்தல், பாடத்திட்ட ஒற்றுமைப்படுத்தல், கல்வி நிர்வாக அதிகாரக் குவிப்பு போன்ற அம்சங்கள் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானவை என்று கழகம் ஆட்சியில் இல்லாதபோதும் வலியுறுத்தியது. ஆட்சியில் இருந்தபோதும் தடுத்து வைத்திருந்தது. அந்த வரிசையில் தற்போது விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான் மசோதாவும் புதிய ஏவுகணையாக வந்துள்ளது.

ஒன்றிய அரசு இதை நிர்வாக சீர்திருத்தம் என்று கூறுகிறது. பல்வேறு கட்டுப்பாட்டு அமைப்புகளின் அதிகாரங்கள் ஒருங்கிணைக்கப்படுவதால் அனுமதி நடைமுறைகள் எளிமையாகும், தரநிலைகள் மேம்படும், உலகத் தரத்திற்கு இந்திய உயர்கல்வி செல்லும் என்று கூறுகிறது. ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் முந்தைய கால அனுபவங்கள் என்ன சொல்கின்றன. ? கடந்த சில ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநிலங்களின் கல்விக் கோரிக்கைகளை மதித்துள்ளதா ? மாற்றுக் கருத்துகளை ஏற்றுக் கொண்டுள்ளதா? என்பது முக்கியமான கேள்வி.

**சந்தேகங்களை வலுப்படுத்துகிறது!**

நீட் (NEET) விவகாரத்தில் தமிழ்நாடு தொடர்ந்து எழுப்பிய சமூகநீதி சார்ந்த கேள்விகளுக்கு என்ன பதில் கூறி இருக்கிறது ? புதிய கல்விக் கொள்கை குறித்து மாநிலங்களின் எதிர்ப்புகளை பரிசீலித்துள்ளதா ? என்கிற கேள்விகளுக்கு கிடைக்கும் பதில்களே இந்த மசோதா குறித்த சந்தேகங்களை வலுப்படுத்துகின்றன.



**தமிழ் கா.அமுதரசன்**
கழக மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்

கல்வி என்பது சாலை அமைப்பது போல ஒரு நிர்வாகப் பணியல்ல. மொழி, கலாச்சாரம், சமூக அமைப்பு, பொருளாதார வாய்ப்பு, வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றோடு இணைந்த துறை. தமிழ்நாட்டின் உயர்கல்வி அமைப்பு உருவாகிய விதமும், வடஇந்திய மாநிலங்களின் அமைப்பு உருவாகிய விதமும் ஒன்றல்ல. அப்படியிருக்க, ஒரே மாதிரியான கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் அனைத்து மாநிலங்களையும் ஒரே சட்டகத்திற்குள் கொண்டு வர முயல்வது கல்வித் தரத்தை உயர்த்தும் முயற்சியா, அல்லது அதிகாரத்தை மையப்படுத்தும் முயற்சியா என்ற சந்தேகம் தவிர்க்க முடியாததாகிறது.

இன்று நடைபெறும் விவாதம் UGCயை மாற்ற வேண்டுமா வேண்டாமா என்பது அல்ல. கல்விக் கொள்கையை உருவாக்கும் அதிகாரம் யாரிடம் இருக்க வேண்டும் என்பது தான் உண்மையான விவாதம். மாநிலங்களின் அனுபவங்களும் தேவைகளும் மதிக்கப்பட வேண்டுமா? அல்லது டெல்லி தீர்மானிக்கும் ஒரே மாதிரியான கட்டமைப்பே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டுமா? என்பதே மையமான கேள்வி.

**எதிர்காலம் பற்றிய விவாதம்!**

தமிழ்நாட்டின் பார்வையில், கல்வி என்பது நிர்வாக வசதிக்காக ஒப்படைக்கப்படும் ஒரு துறை அல்ல; சமூகநீதி மற்றும் மாநில உரிமையின் அடையாளம். அதனால்தான் “விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான்” மசோதா குறித்த விவாதம் கல்வி நிர்வாகம் பற்றிய விவாதமாக மட்டுமல்லாமல், கூட்டாட்சி இந்தியாவின் எதிர்காலம் பற்றிய விவாதமாகவும் மாறியுள்ளது.

கல்வியை மேம்படுத்துவது அவசியம். சீர்திருத்தங்களும் தேவை. ஆனால் சீர்திருத்தத்தின் பெயரில் அதிகாரங்கள் அனைத்தும் ஒன்றிய அரசிடம் குவிக்கப்படுகின்றனவா என்பதை மாநிலங்கள் கேட்பது ஜனநாயகத்தின் அடிப்படை உரிமை. அந்தக் கேள்வியை கழகம் மீண்டும் எழுப்புகிறது.

கடந்த ஆட்சி காலத்தில் நம் கழகத் தலைவர் பலமான எதிர்ப்பினை தெரிவித்து, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்தார்.

**இந்தித் திணிப்பு போராட்டம்!**

மொழிக் கொள்கை விவாதமும் இதே பாதையில் பயணிக்கிறது. இந்தியாவில் எந்த மொழிக்கும் எதிராக தமிழ்நாடு போராடவில்லை. ஆனால் எந்த மொழியையும் திணிப்பதற்கு எதிராக நூற்றாண்டு கால வரலாற்றுப் போராட்டத்தை நடத்தியிருக்கிறது. 1938 முதல் 1965 வரை நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை வடிவமைத்தன. அந்த வரலாற்றை நினைவுபடுத்தும் வகையிலேயே சமீபத்தில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டங்களில் இந்தி கற்பித்தல் தொடர்பாக எழும் விவாதங்களும் பார்க்கப்படுகின்றன.

> **பி.எம். ஸ்ரீ திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை!**
>
> **உயர்கல்விக்கான ஒரு ஒழுங்குமுறை அமைப்பை நிறுவ முயலும் வி.பி.எஸ்.ஏ. மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கழகத்தின் மாணவர் அணி சார்பில், வணக்கத்திற்குரிய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படியும் வரும் ஜூன் 23ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை சைதாப்பேட்டை கலைஞர் நூற்றாண்டு வளைவு அருகில் ஒன்றிய அரசைக்கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பை, மொழி உரிமையை, மாநில சுயாட்சியினை கடத்திட மாணவர் அடலேறுகள் களம் காண உள்ளனர்.**

ஒன்பதாம் வகுப்பு அளவில் இந்தி கற்பித்தலை வலுப்படுத்தும் முயற்சிகள், மூன்றாவது மொழி கற்றலை நடைமுறைப் படுத்தும் அழுத்தங்கள், தேசிய அளவிலான ஒரே கல்வி அணுகுமுறை ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பார்க்கையில், இயல்பாகவே ஒரு சந்தேகம் எழுகிறது. இந்தி, சமஸ்கிருத மொழி ஆதிக்கத்தை மீண்டும் உருவாக்கும் திட்டம் தீட்டப்பட்டு வருவதை திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக் காட்டி வருகிறது.

**இந்த நிலையில்தான் இன்று முக்கியமான கேள்வி எழுந்துள்ளது. தமிழகத்தின் அரசியல் எதிர்காலம் இன்று ஆட்சி பொறுப்பில் உள்ள தமிழக வெற்றிக் கழகம், கல்வி மற்றும் மாநில உரிமை போன்ற அடிப்படை விவகாரங்களில் என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பது இன்னும் தெளிவாக வில்லை. ஆனால், பா.ஜ.க. கொண்டுள்ள நிலைபாடுதான் அவர்களின் நிலைபாடு என்பதை சொல்லவும் வேண்டுமா ? என்கிற நிலையில்தான் உள்ளனர்.**

நீட் , புதிய கல்விக் கொள்கை, மொழிக் கொள்கை, மாநிலங்களின் நிதி உரிமைகள், ஆளுநர் தலையீடு, மத்திய அமைப்புகளின் அதிகார விரிவாக்கம் போன்ற விவகாரங்களில் தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள் தங்களது நிலைப்பாடுகளை வெளிப்படையாக பதிவு செய்து வருகின்றன. ஆனால் உயர்கல்வி நிர்வாகத்தை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டுக்குள் மேலும் கொண்டு செல்லக்கூடிய “விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான்” போன்ற திட்டங்கள் குறித்து தமிழ்நாடு அறிய விரும்பும் பதில் த.வெ.க. அரசிடமிருந்து இன்னும் கிடைக்கவில்லை.

**மௌனமும் நிலைப்பாடுதான்**

கல்வி என்பது வெறும் நிர்வாகத் துறை அல்ல; அது சமூகநீதி, மொழி உரிமை மற்றும் மாநில சுயாட்சியின் நீட்சியாகும். எனவே ஒன்றிய அரசு கொண்டு வரும் ஒவ்வொரு கல்விக் கொள்கையையும், அதன் அரசியல் விளைவுகளையும் ஆய்வு செய்து கேள்வி கேட்பது அவசியமாகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டை வழிநடத்த விரும்பும் எந்த அரசியல் சக்தியும், “ஒன்றிய அரசு கொண்டு வரும் திட்டங்களை ஏற்கிறோமா, எதிர்க்கிறோமா” என்பதைக் கடந்து, “தமிழ்நாட்டின் தனித்துவமான கல்வி மற்றும் சமூக நீதி மாதிரியை எவ்வாறு பாதுகாப்போம்?” என்ற கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

**இன்றைக்கு கழகம் தனது பதிலைத் தெளிவாகக் கூறுகிறது: கல்வி மீது மாநிலங்களின் உரிமை குறையக் கூடாது; கூட்டாட்சித் தத்துவம் பலவீனப்படுத்தப்படக் கூடாது; சமூகநீதி அடிப்படையிலான கல்வி வாய்ப்புகள் பாதிக்கப்படக் கூடாது. ஆனால் ஆட்சிக்கான மாற்று என்று தன்னை முன்வைக்கும் சக்திகள், குறிப்பாக தமிழ்நாடு உரிமைகள் மற்றும் ஒன்றிய அரசின் கொள்கைகள் தொடர்பாக எந்தப் பக்கம் நிற்கிறது என்பதை மக்கள் அறிய விரும்புகின்றனர்.**

**எங்கே இருந்தார்கள்!**

நாம் நீட்க்கு எதிராக உறுதியாக போராடியபோது அவர்கள் எங்கே இருந்தார்கள்? புதிய கல்விக் கொள்கை விவாதத்தில் என்ன நிலைப்பாடு எடுத்தார்கள்? மொழிக் கொள்கை தொடர்பாக ஏன் பூடகமான பதில்கள்? மாநில உரிமை மீதான ஒன்றிய அரசின் தலையீடுகள் குறித்து எவ்வாறு எதிர்வினையாற்றினார்கள்? எதிர்வினையாற்ற உள்ளனர்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களே நாளைய ‘விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்டான்’ போன்ற முயற்சிகள் குறித்த அவர்களின் நிலைப்பாட்டை முன்கூட்டியே உணர்த்துகின்றன.

“அரசியலில் மௌனமும் ஒரு நிலைப்பாடுதான்“ என்பதற்கு ஏற்ப, தமிழ்நாட்டை ஆள்பவர்களின் கள்ள மௌனத்தை நாம் வேடிக்கை பார்க்க மாட்டோம்.

**கழகம் இந்தி மொழி ஆதிக்கத்தையும், ஆரிய படையெடுப்பையும் உறுதியுடன் என்றும் எதிர்த்து நிற்கும். ஆனால், தமிழ்நாட்டை ஆள்கிறோம் என்கிற பெயரில் ஆரியத்துடன் சமரசங்கள் செய்பவர்களுக்கு சொல்லிக் கொள்வது ஒன்றுதான். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரின் வரலாற்றில் 1965 ஆம் ஆண்டினை புரட்டிப் பாருங்கள். அந்தப் படை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் எந்த அணிவகுப்புக்கும் தயாராகவே உள்ளது என்பதை சொல்லி வைப்போம்.**